பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 | வள்ளுவர் ஆண்டு 2052 | புரட்டாதி 27 | புதன்கிழமை | 13.10.2021 | கதிர் 205

## மூன்று விபத்துக்களில் இரண்டு பெண்கள் உட்பட நால்வர் சாவு

மூன்று இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் பெண்கள் இருவர் உட்பட நால்வர் மரணமடைந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கப் ரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகிச் சென்று விபத்துக்குள்ளானதில் ☞2

## கோட்டாபய துரோகி!

## நாம் ஒப்படைத்த பிள்ளைகளுக்கு மரணச்சான்றிதழை எவ்வாறு வழங்குவீர் என்று உறவுகள் கேள்விக்கணை




(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 1,700 ஆவது நாளாக சுழற்சி முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வவுனியா, ஏ - 9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டக் கொட்டகை முன்பாக இன்று காலை குறித்த போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார், ☞2



## யாழில் பொலிஸ்மா அதிபர் இரு ஆலயங்களில் வழிபாடு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாணத்தில் சட்டம் - ஒழுங்கு தொடர்பில் நேரில் ஆராயும் வகையில் பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன நாளை கிளிநொச்சியில் கூட்டம் ☞2

### விவசாயிகள், மீனவர்கள் பிரச்சினைகளுக்கு

# நீதி கோரி தமிழர் தாயகத்தில் 17,18 இல் பெரும் போராட்டம்!

### அரசுக்கு எதிராக அணிதிரளுமாறு சுமந்திரன் எம்.பி. அழைப்பு

(இ.கலையமுதன், ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

**தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நீதி கோரி எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் போராட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

**யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.** ☞2




## இந்திய இராணுவத் தளபதி கோட்டாவுடன் நேரில் பேச்சு



இந்திய இராணுவத்தின் பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நாராவணே அவர்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

பிராந்தியப் பாதுகாப்பு விடயத்தில் அயல் நாடுகளின் ஸ்திரத்தன்மையை, தமது நாடு அதிகளவில் எதிர்பார்க்கின்றது என்று தெரிவித்தவாறு ஜெனரல் தனது ☞2

## வல்லிபுரம், செல்வச்சந்நிதி ஆலயங்களுக்குள் சப்பாத்துக்களுடன் சென்ற பொலிஸ் அதிகாரி



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

இந்து மத நியதிகளை மதிக்காமல் வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார், தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயங்களுக்குள் சப்பாத்துடன் சென்ற பொலிஸ் அதிகாரி தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. ☞2

## திருமணம் நடைபெறவிருந்த தம்பியை குத்திப் படுகொலை செய்த அண்ணன்



குடும்பத் தகராறு காரணமாக தன் உடன்பிறந்த தம்பியை, மூத்த சகோதரன் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளார்.

இந்த கொடூரச் சம்பவம் மாத்தளைப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் இன்று தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் திக்கிரிய வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 31வயதான ஸ்டீவன் ராஜ் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தக் கொலையுடன் தொடர்புடைய மூத்த சகோதரன் ☞2

## நோர்வூட்டில் குளவி கொட்டி 18 தொழிலாளர்கள் பாதிப்பு

நோர்வூட் - ஸ்டொக்ஹம் தோட்டம் தொழிற்சாலைப் பிரிவில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 18 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று முற்பகல் முதலாம் இலக்க தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்தபோது, 17 பெண் தொழிலாளர்களும், ஆண் தொழிலாளி ஒருவரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

அவர்களில் ஐவர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஏனையோர் தோட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

## விபத்தில் பெண் காயம்

(வவுனியா நிருபர்)

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இந்திய இராணுவத் தளபதி ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலை ஆரம்பித்தார்.

தான் இராணுவச் சேவையில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில், இந்தியாவில் பெற்ற இராணுவப் பயிற்சிகள் மற்றும் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட ஜனாதிபதி, இந்திய இராணுவப் பயிற்சிகளின் மூலம் நம் நாட்டு இராணுவ அதிகாரிகளுக்குக் கிடைக்கும் தலைமைத்துவப் பண்புகள் குறித்துத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

பல தேச எல்லைகளால் சூழ்ந்துள்ள இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், மலைசார்ந்த கடினமான பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கான நலத்திட்டங்கள் மற்றும் தலைமைப் பயிற்சி பெறும் அதிகாரிகளுக்காக இந்திய இராணுவ அதிகாரிகள் பரிந்துரைக்கும் தரநிலைகள் போன்ற விடயங்களை, ஜெனரல் மனோஜ் முகுந்த்திடம் ஜனாதிபதி கேட்டுத் தெரிந்துகொண்டார்.

படைப் பிரிவொன்றின் தளபதியாக நியமனம் பெற்ற பின்னரே, தலைமைத்துவப் பயிற்சிகளுக்காக இந்திய இராணுவ அதிகாரிகள் அனுப்பப்படுவர் என்று தெரிவித்த ஜெனரல், அந்தந்தத் தரநிலையினர் ஓய்வுபெறும் வயதெல்லைகள் குறித்தும் விவரித்தார்.

இலங்கை இராணுவ அதிகாரிகளில் சுமார் ஆயிரம் பேர், ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவில் பயிற்சிகளைப் பெறுகின்றனர். பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் வேண்டுகோளுக்கமைய, மேற்படி இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக மேலும் 50 இராணுவ அதிகாரிகளுக்கு, எதிர்காலத்தில் விசேட பயிற்சிப் பாடநெறிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் ஜெனரல் மனோஜ் முகுந்த் தெரிவித்தார்.

இந்திய அமைதிப் படையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, திருகோணமலை - 4ஆம் மைல்கல் பிரதேசத்தில் தான் பணியாற்றிய காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் நினைவுகள், தற்போதைய இந்த விஜயத்தின் மூலம் புதுப்பிக்கப்பட்டுள்ளன என்றும் ஜெனரல் மனோஜ் முகுந்த் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவ அதிகாரி என்ற வகையில், அந்த நினைவுகள் பற்றிக் கலந்துரையாடக் கிடைத்தமை தொடர்பில் ஜனாதிபதிக்கு அவர் மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டார்.

இந்திய இராணுவத் தலைமையகத்தின் பயிற்சிகளுக்கான கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ரஜீவ் தாபர், இராணுவ ஆலோசகர் ஜெனரல் விக்ராந்த் விளாஸ் நாயக், வெளிவிவகாரப் பிரிவின் உறுப்பினர் கேர்ணல் மந்தீப் சிங் தில்லன், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத்தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

## விபத்தில் பெண் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம், புதிய சாளம்பைக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, அதே திசையில் பின்புறமாகப் பயணித்த பிளசர் ரக மோட்டார் சைக்கிள் உழவு இயந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது உழவு இயந்திரத்தின் பின் பகுதியிலுள்ள கலப்பையில் மோதுண்டு விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வெளிக்குளத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## திருமணம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞருக்கு இம்மாதம் 21ஆம் திகதி திருமணம் நடைபெறவிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மாத்தளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வல்லிபுரம், ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கொட்டாச்சி என்பவரே இவ்வாறு மத நியதிகளை மீறி ஆலயங்களுக்குள் சப்பாத்துடன் சென்றுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு இன்று நண்பகல் வருகை தந்துள்ள பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ர மரத்ன வரலாற்றுச் சிறப்பு மிக்க வல்லிபுர ஆழ்வார், தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் ஆலய வெளி வீதியில் சப்பாத்துக்களைக் கழற்றிவிட்டு ஆலயங்களுக்குள் சென்று வழிபாடுகளை முன்னெடுத்த நிலையில் காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சப்பாத்துக்களை கழற்றாது ஆலயங்களுக்குள் சென்றுள்ளார்.

## நீதி கோரி தமிழர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயிகள் உரத்தைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள். குறிப்பாக தென் பகுதியிலும் இந்தப் பிரச்சினையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

குறிப்பாக தென் பகுதியில் அரசுக்கு எதிராக பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், விவசாய அமைச்சரின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் உள்ள கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக மக்கள் ஓரிடத்தில் ஒன்று சேர்வது நல்ல விடயம் அல்ல. அது சமூகப் பொறுப்புக்கும் மாறானது என்பதைக் கருத்தில்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து கமநல சேவை நிலையங்களுக்கும் முன்னால் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் மாத்திரம் ஒரே நேரத்தில் ஒன்றுகூடி எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் .

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 28 கமநல சேவை நிலையங்கள் இருக்கின்றன. அனைத்து நிலையங்களுக்கு முன்னாலும் எதிர்வரும் திங்கட்கிழமை 18ஆம் திகதி காலை 9 மணிக்கு சமூகப் பொறுப்போடு சமூக இடைவெளியைப் பின்பற்றி தற்போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த அரசுக்கு எதிரான போராட்டத்தில் அனைத்து இடங்களிலும் ஒரே நேரத்தில் கவனவீர்ப்புப் போராட்டத்தைச் செய்யவுள்ளோம்.

தெற்கில் உள்ள ஏனைய எதிரணி அரசியல் தலைவர்களுடன் பேசியுள்ளோம். அவர்களும் தங்களுடைய பிரதேசங்களிலும் இவ்வாறான பிரச்சினை காணப்படுகின்றது எனவும், தொடர்ச்சியாக தமது பகுதியில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். அதாவது எமக்கு பசளை கிடைக்கும் வரை இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

அதேபோல் வடக்கு மீனவர்கள் அத்துமீறிய இந்திய இழுவைப் படகுகளால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

குறித்த இந்திய மீனவர்களின் வருகையை நிறுத்துவதற்கு ஏற்கனவே சட்ட மூலம் இயற்றப்பட்டுள்ள நிலையில், அதனை அரசு நடைமுறைப்படுத்தத் தயங்குகின்றது. குறிப்பாக கடற்தொழில் அமைச்சராக ஒரு தமிழர் இருந்தும், அவர் அதனை நடைமுறைப்படுத்துவது மிகவும் இலகுவான விடயம்.

ஆனால், அவர் அதனைச் செயற்படுத்தாததன் காரணமாக இந்திய இழுவைப் படகுகளின் தொல்லை வடக்கு பகுதியில் மீனவர்களைப் பெரிதாகப் பாதிக்கின்றது. எனவே, குறித்த சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தாமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 17ஆம் திகதி முல்லைத்தீவு கடலில் இருந்து பருத்தித்துறைக்குக் கடல் வழியாக வந்து அமைச்சருக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம். அனைத்துப் போராட்டங்களுக்கும் எமது மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் - என்றார்.

## நாம் ஒப்படைத்த ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும், காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளின் படங்களையும் தாங்கியிருந்தனர்.

இதன்போது அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

1,700 ஆவது நாளாக நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். எங்களது பிள்ளைகளுக்கு எந்தவொரு தீர்வும் எட்டப்படவில்லை. ஜனாதிபதி மரணச் சான்றிதழ் வழங்குவதாகக் கூறியுள்ளார். எந்தவொரு தாயும் மரணச் சான்றிதழ் வாங்குவதற்குத் தயாராக இல்லை. அதை ஜனாதிபதி சொன்ன நாளில் இருந்து தாய்மார் தேம்பித் தேம்பி அழுகின்றார்கள். ஜனாதிபதி அமெரிக்கா சென்று தனது பேரப்பிள்ளையைத் தூக்கி மழலை பொழிகின்றார்.

நாங்கள் எமது பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு போராடிக் கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதிக்கு இருக்கின்ற பாசம் தானே எங்களுக்கும் எங்கள் பிள்ளைகள் மேல் இருக்கும். அம்மா என்று சத்தம் கேட்கும்போது எமது வயிறு கொதிக்கின்றது. கண்கண்ட சாட்சியங்கள் இருக்கின்றன. கோட்டாபய துரோகி. இராணுவத்தினரிடம் நாம் ஒப்படைத்த பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழை எவ்வாறு வழங்க முடியும்? - என்றார். (100)

## யாழில் பொலிஸ்மா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை நடத்தவுள்ள நிலையில் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

இன்று நண்பகல் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர் வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம், தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் ஆகியவற்றில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நாளைய கூட்டத்துக்காகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் சட்டம் - ஒழுங்கு நிலைமைகள், பொலிஸ் துறையில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன நாளை ஆராயவுள்ளார்.

## இரண்டு பெண்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வெலிமடை - ஊவா பரணகம பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில், கப் ரக வாகன சாரதியும், அதில் பயணித்த மற்றுமொருவரும் உயிரிழந்துள்ளனர். இவர்கள் இருவரும் ஹக்கலை மற்றும் கலஹகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 29 மற்றும் 36 வயதுகளையுடையவர்கள்.

இதேவேளை, அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காலி - கொழும்பு வீதி, அம்பலாங்கொடை பிரதான பஸ் தரிப்பிடத்துக்கு அருகில், பாதசாரி ஒருவர் வீதியைக் கடக்க முற்பட்டபோது லொறி ஒன்றுடன் மோதுண்டு பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

ஹிக்கடுவ பிரதேசத்தை சேர்ந்த 51 வயதுப் பெண்ணே உயிரிழந்துள்ளார். கொழும்பிலிருந்து - காலி நோக்கிப் பயணித்த லொறியே குறித்த பெண்ணை மோதியுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த குறித்த பெண் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்துள்ளார். விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதனிடையே, களுத்துறை தொடங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஸ்வத்தை பிரதேசத்தில், மத்துகமவிலிருந்து களுத்துறை நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி பெண் ஒருவர் மீது மோதியதில் குறித்த பெண் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்த பெண்ணின் பெயர், வயது விவரங்கள் தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை. பிரேத பரிசோதனைக்காக நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.





## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கோட்டாவின் சமாளிப்பு

தமது இரண்டு ஆண்டுகால நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி தொடர்பான ஒரு சுயமதிப்பீடாக சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்ட சில கருத்துக்கள் இப்போது தென்னிலங்கையில் பெரிய விடயமாக ஆய்வுக்கும் விவாதத்திற்கும் விமர்சனத்துக்கு உள்ளாகி வருகின்றன.

"இந்த (நெருக்கடியான) சமயத்தில் இக்கட்டுகளுக்கு மத்தியில் மக்களுக்காக நாம் பலவற்றை செய்திருக்கின்றோம். தாங்கள் எதிர்பார்த்தவற்றை நாங்கள் நிறைவு செய்யவில்லை என்பதற்காக மக்கள் என் மீதும் எனது அரசின் மீதும் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். அனைத்து அமைச்சர்களும், எம்.பிக்களும் கூட அதை ஏற்க வேண்டும்" – என்று அவர் கூறியிருக்கின்றார்.

தம் மீதும், தமது அரசின் மீதும் மக்கள் அதிருப்தி கொண்டிருக்கின்றமையை ஏற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி, அதனடிப்படையில் தோல்விக்கு பொறுப்பேற்று, பதவியை இராஜினாமா செய்து, பொறுப்புகளிலிருந்து விலக வேண்டும் என்று எதிரணிகள் வற்புறுத்துகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கிறது. கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. இதனை வற்புறுத்தி இருக்கின்றார்.

ஜனாதிபதியின் இந்த நிலைப்பாடு, உண்மையை – தமது நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளை – ஒப்புக் கொண்டு, யதார்த்தத்தை ஏற்கும் பணிவின் வெளிப்பாடே தவிர, அவரது அரசின் பலவீனமோ, தோல்வியோ அல்லது இந்த அரசின் முடிவின் எல்லையோ அல்ல என்று சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் கருத்து வெளியிட்டு இருக்கின்றனர்.

"குறைகளை – பின்னடைவுகளை – ஒப்புக் கொள்வது என்பது மிகப்பெரிய மனிதப் பண்பியல்பு. தாழ்மையின் – பணிவின் – வெளிப்பாடு. அதனைத் தோல்வியாக அர்த்தப்படுத்தாதீர்கள்" – என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும விளக்கமளித்திருக்கிறார்.

"இது ஓர் உச்ச ஜனநாயக முறையிலான அரசு. சுய விமர்சனமும், விமர்சனக் கருத்துப் பரிமாற்றமும் இந்த அரசு கட்டமைப்பின் பிரதான அங்கங்கள். இதுவே உயிர்ப்புள்ள ஜனநாயகத்தின் மகத்தான குறியீடுகள்" – என்று வேறு அவர் வியாக்கியானம் கொடுத்துள்ளார்.

தன் மக்கள் மீதான தனது கடப்பாட்டின் அடிப்படையில் மிகப் பணிவுடன் சுயவிமர்சனம் செய்து உண்மையை ஒப்புக் கொண்டுள்ள மகத்தான தலைவர் தாம் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விடயத்தின் மூலம் நிரூபித்திருக்கிறார் என்றும் அவர் புகழாரம் சூட்டியிருக்கிறார்

ஜனாதிபதி இப்படி நிலைமையை ஒப்புக்கொண்டமைக்கு அவரது பணிவோ, துணிவோ, திடமோ காரணமாக இருந்துவிட்டு போகட்டும். ஆனால் நாட்டு மக்கள் இந்த தலைவரைத் தாங்கள் ஏன் தெரிவு செய்தோம் என்று தம்மைத் தாமே நொந்து கொள்ளும் – கடிந்து கொண்டும் – உச்ச எரிச்சலில் இருக்கின்றனர். மோசமான பொருளாதாரக் கொள்கை, இராணுவப் போக்கு ஆட்சி அதிகாரம், ஜனநாயக விரோதச் செயற்பாடுகள், கொவிட் தொற்றுக் கட்டுப்படுத்தலில் முறையான – ஒழுங்கான – தெளிவான – உறுதியான – கொள்கைப் போக்கு இல்லாமை போன்ற இன்னோரன்ன காரணங்களாலும், மோசமான விலைவாசி உயர்வு மற்றும் மக்கள் வயிற்றில் அடிக்கும் செயற்பாடுகளுக்காக மக்கள் கொதித்து போய் இருக்கின்றனர். ஜனாதிபதி கோட்டாபய கூறுவதுபோல மக்கள் அதிருப்தியில் அல்லர், அதையும் தாண்டி ஆட்சித் தலைமைக்கு எதிரான வெறிக் கோபத்தில் இருக்கின்றார்கள்.

ஆட்சியாளர்களுக்கு இடித்துரைக்கும் வகையில் மக்களின் அந்த கோபம் – சீற்றம் – எரிச்சல் – பீறிட்டு வெளிப்பட்டு வருவதால், அதை உணர்ந்து, அதனைச் சமாளிப்பதற்காக, மக்கள் அதிருப்தியுற்றுள்ளனர் என்று பீலா விடுகின்றார் கோட்டா. நாட்டு மக்கள் அதிருப்தி நிலையைத் தாண்டி, ஆவேச நிலைக்குள் புகுந்து மாதங்கள் பல கடந்து விட்டன என்பதுதான் உண்மை நிலவரமாகும்.



# பாதுகாப்பு மிக்க மாகாணமாக வடக்கை மாற்றுவதே விருப்பம்!

## புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா சபதம்

'தமிழர் தாயக பிரதேசமான வட மாகாணத்தை சட்டத்தை மதிக்கின்ற, அமைதியான மற்றும் பாதுகாப்பான மாகாணமாக மாற்ற விரும்புகிறேன் என' என வட மாகாணத்தின் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

அரச அதிகாரிகளை, பொது மக்கள் வந்து சந்திப்பதற்கு அப்பால், அதிகாரிகள் மக்களைச் சென்று சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கான வழிகளை ஏற்படுத்தும் வகையில் தானே நேரடியாக சென்று மக்களை சந்திக்கவுள்ளேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஜீவன் தியாகராஜா தன்னுடைய எதிர்காலத் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக தொலைபேசியூடாக வழங்கிய விசேட செவ்வியில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வட பகுதி கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பான பிரச்சினைக்கான தீர்வு பற்றி செய்தியாளர் வினவியதற்கு பதிலளித்த வட மாகாண ஆளுநர் – இது தொடர்பில் துறைக்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளேன் எனவும், பிரச்சினைக்கு சுமூகமாகத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணத்தை மையப்படுத்தி விவசாயம், கல்வி, காலநிலை மாற்றம் உள்ளிட்ட 53 விடயங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சி நிரல் ஒன்றின் அடிப்படையில் பணியாற்றத் தான் திட்டமிட்டுள்ளார் எனவும், வடமாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஜீவன் தியாகராஜா அந்தச் செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தாம் பதவி நீக்கப்பட்டமை தொடர்பில் மிகவும் மனவருத்தம் அடைந்துள்ளேன் என கடந்த ஒன்றரை வருடமாக வடமாகாண ஆளுநராகக் கடமையாற்றிய பி.எஸ்.எம் சார்ள்ஸ் தெரிவித்திருந்தார்.

புதிய ஆளுனர் நியமனம் தொடர்பில் தான் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தல் மீறல் மேலும் 55 பேர் கைது!

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இன்று (புதன்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 55 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2020 ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக மொத்தம் 80 ஆயிரத்து 709 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதேவேளை மேல் மாகாணத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள 13 உள் நுழையும் மற்றும் வெளியேறும் சோதனைச் சாவடிகளில் நேற்றைய தினம் மொத்தமாக 1,140 வாகனங்களில் பயணித்த 1,837 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் உரிய காரணமின்றி 135 வாகனங்களில் பயணித்த 214 நபர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.



# ஆசிரியர்கள் – பிரதமர் சந்திப்பு இறுதி முடிவின்றி நிறைவடைவு!

ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற பேச்சு இறுதி முடிவின்றி நிறைவடைந்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இறுதி முடிவு எடுக்க தொழிற்சங்கங்கள் மீண்டும் ஒன்று கூடவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கானிஸ்தானுடன் நல்லுறவைப் பேண தலிபான்கள் உலக நாடுகளுக்கு அழைப்பு



ஆப்கானிஸ்தானுடன் நல்லுறவைப் பேண சர்வதேச நாடுகள் முன்வர வேண்டும் என தலிபான்கள் தலைமையிலான ஆப்கானிஸ்தானின் அரசின் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முத்தாகி அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும் ஆப்கானில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் கல்வி பெறும் உரிமை உள்ளிட்ட உரிமைகளை உறுதி செய்ய வேண்டும் என்ற சர்வதேச நாடுகளின் கோரிக்கை தொடர்பிலான உறுதிமொழிகளை வழங்குவதை அவர் தவிர்த்தார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளை கல்வி கற்க அனுமதித்தல், வேலைக்குச் செல்ல அனுமதித்தல் போன்ற விடயங்களில் முடிவுகளை எடுக்க கால அவகாசம் தேவை எனவும் அவர் கூறினார்.

ஆப்கானிஸ்தானில் 20 வருடங்களாக நீடித்த அமெரிக்காவின் இராணுவத் தலையீடு முடிவுக்கு வந்து தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் அங்கு பெரும் பொருளாதார மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் மத்திய வங்கி சொத்துகளில் பில்லியன் கணக்கானவை முடக்கப்பட்டுள்ளன. அத்துடன், சர்வதேச நிதி நிறுவனங்கள் நிதிக்கான அணுகலை நிறுத்தி விட்டன.

அத்துடன், வங்கிகளில் பணம் இல்லாததால் ஆப்கானிஸ்தானில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. மேலும் உணவுப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளன.

இந்த நெருக்கடிகளால் குறைந்தது 1.8 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் டோஹாவில் மோதல் மற்றும் மனிதாபிமான ஆய்வுகளுக்கான மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் நேற்று பங்கேற்றுப் பேசிய ஆப்கானிஸ்தானின் அரசின் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முத்தாகி, சர்வதேச சமூகம் எங்களுடன் ஒத்துழைத் துச் செயற்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இவ்வாறு ஒத்துழைத்தால் மட்டுமே நாமும் உலகத்துடன் நேர்மறையான வழிகளில் இணைந்து செயலாற்ற முடியும் எனவும் அவர் கூறினார்.

ஆனால் சர்வதேச சமூகத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றான பெண்கள் உயர்தர கல்வியைத் தொடர அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தலிபான்கள் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

தலிபான்களின் இஸ்லாமிய இராச்சிய அரசு கவனமாகவே நகர்கிறது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று சில வாரங்களே ஆகின்றன. 20 ஆண்டுகளாக சர்வதேச சமூகத்தால் செயற்படுத்த முடியாத சீர்திருத்தங்களை நாங்கள் உடனடியாக செய்ய வேண்டும் என எதிர்பார்க்க முடியாது என்றும் அமீர் கான் முத்தாகி கூறினார்.

முன்னைய அமெரிக்கா சார்பு ஆப்கான் அரசிடம் அதிக நிதி ஆதாரங்கள் இருந்தன. அவர்களுக்கு வலுவான சர்வதேச ஆதரவும் இருந்தது. இவை எதுவும் இல்லாமல் இரண்டு மாதங்களில் அனைத்து சீர்திருத்தங்களையும் செய்யுமாறு சர்வதேசம் எவ்வாறு வலியுறுத்த முடியும்? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தானில் வளர்ந்துவரும் பொருளாதார நெருக்கடி அந்நாட்டு மக்களை கடுமையாகப் பாதிக்கும் என எச்சரித்துள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், அங்கு பொருளாதார நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு பணப்புழக்கத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை சர்வதேச சமூகம் கண்டறிய வேண்டுமென நேற்று அழைப்பு விடுத்துள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய குட்டெரெஸ், பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என ஓகஸ்ட் மாதத்தில் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் அளித்த வாக்குறுதிகளை மீறியுள்ளதாகக் குற்றம் சாட்டினார்.

பெண்கள், சிறுமிகளின் உரிமைகளை ஏற்க மறுக்கும் தலிபான்களில் செயற்பாடு அவர்களின் கனவுகளை சிதைக்கும். பெண்கள் வேலைக்குச் செல்வதை தலிபான்கள் தடுத்தால் பொருளாதாரத்தை சீரமைக்க முடியாது எனவும் கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் ஐ.எஸ்.கே. கட்டுப்பாட்டில் 17 சதவீத மாவட்டங்கள்!



ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கும் ஐ.எஸ்.கே. பயங்கரவாத அமைப்பின் கட்டுப்பாட்டில் தற்போது 17 சதவீத மாவட்டங்கள் இருக்கின்றன என மதிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கும் தலிபான்களுக்கும் இடையே ஏற்படவிருந்த அரசியல் உடன்பாடு நோக்கி உலகின் கவனம் திரும்பிய நிலையில், தனது பலத்தைப் பெருக்கிக் கொண்டது ஐ.எஸ்.கே. இப்போது ஆப்கானிஸ்தானின் 17 சதவீத மாவட்டங்கள் ஐ.எஸ்.கே. கட்டுப்பாட்டில் இருக்கின்றன என மதிப்பிடப்பட்டுள்ளது. ஐ.எஸ்.கே. அமைப்பு குண்டூஸில் உள்ள மசூதியில் அண்மையில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் சுமார் 50 பேர் உயிரிழந்தனர்.

அதேபோல இந்த அமைப்புதான் ஓகஸ்ட் மாதம் உலக நாடுகள் பல ஆப்கானிஸ்தானை விட்டு அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருந்த நிலையில், காபூல் விமான நிலையத்தில் மோசமான தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தியது. ஈராக்கில் சதாம் ஹுசைன் வீழ்ச்சிக்குப் பின்னர் திடீர் எழுச்சி பெற்ற ஐ.எஸ் (இஸ்லாமிய தேசம்) பயங்கரவாத இயக்கத்தின் ஆப்கானிஸ்தான் பிரிவுதான் ஐ.எஸ்.கே. ஐ.எஸ்–கோராசான் மாகாணம் என்பதன் சுருக்கமே ஐ.எஸ்.கே.

கோராசான் பிராந்தியமானது இந்த இயக்கத்தின் பார்வையில் ஈரான், ஆப்கானிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளை உள்ளடக்கியது.

ஈராக், சிரியாவில் ஐ.எஸ் இயக்கம் வலுவாக இருந்தபோது 2015ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானின் கிளையாகத் தொடங்கப்பட்டது ஐஎஸ்கே.

ஐ.எஸ் போலவே பரந்த இஸ்லாமிய தேசத்தை மத்திய மற்றும் தெற்காசியாவிலும் கட்டமைக்க வேண்டும் என்பதுதான் ஐ.எஸ்.கேயின் நோக்கமும்.

ஆப்கான்– பாகிஸ்தான் எல்லையில் உள்ள நங்கர்கர் மாகாணத்தைத் தளமாகக் கொண்டு இந்த அமைப்பு செயற்பட்டு வருகிறது.

தொடங்கப்பட்ட குறுகிய காலத்திலேயே ஆப்கானிஸ்தானின் வடக்கு, வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஊரக மாவட்டங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

2018இல் ஐ.எஸ்.கே பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் சுமார் 1,000 பேர் கொல்லப்பட்டனர். இதில் 75 சதவீத உயிரிழப்புகள் ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்தன.

ஆப்கானிஸ்தான் மட்டுமின்றி பாகிஸ்தானிலும் ஐ.எஸ்.கே தாக்குதல் நடத்தியது. 2018இல் அந்த இயக்கம் நடத்திய 125 தாக்குதல்களில் 36 சதவீதம் தற்கொலைப் படைத் தாக்குதல்கள்.

அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்தியதன் மூலம் உலகில் முதல் நான்கு கொடூரமான பயங்கரவாத இயக்கங்களில் ஒன்றாக ஐ. எஸ்.கே மாறியது.

2016ஆம் ஆண்டு இந்த இயக்கத்தில் சுமார் 4000 பேர் இருந்த நிலையில், அமெரிக்கா மற்றும் ஆப்கான் அரசாங்கப் படையின் நடவடிக்கையால் 2018இல் சுமார் 600 முதல் 800 பேராக குறைந்தனர். ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படையினர் முழுமையாக வெளியேறிய ஓகஸ்ட் இறுதி நிலவரப்படி ஐ.எஸ்.கேயில் சுமார் 2,000 பேர் இருப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# ஆஸ்திரியாவின் புதிய பிரதமராக அலெக்சாண்டர் ஷாலென்பெர்க் பதவியேற்பு!



மத்திய ஐரோப்பிய நாடான ஆஸ்திரியாவின் புதிய பிரதமராக அலெக்சாண்டர் ஷாலென்பெர்க் பதவியேற்றுள்ளார்.

முன்னதாக பிரதமராக இருந்த செபாஸ்டியன் கர்ஸ் முறைக்கேடு குற்றச்சாட்டு காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) அலெக்சாண்டர் ஷாலென்பெர்க் பதவியேற்றார்.

முன்னாள் பிரதமர் செபாஸ்டியன் கர்ஸின் அமைச்சரவையில் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த அலெக்சாண்டர் ஷாலென் பெர்க்கு ஜனாதிபதி அலெக் சாண்டர் வான்டெர் பெலன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இதேவேளை புதிய வெளியுறவுத் துறை அமைச்சராக பிரான்ஸுக்கான தூதராக இருந்த மிக் கேல் லின்ஹார்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளும் மக்கள் கட்சியின் தலைவராக இருந்த 35 வயதான செபாஸ்டியன் கர்ஸ், ஊடகங்களில் அரசாங்கப் பணத்தைச் செலவிட்டு கருத்துக்கணிப்புகள் மற்றும் சாதகமான செய்திகளை வெளியிட்டு தனது செல்வாக்கை அதிகரிக்க முயன்றார் என குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, அவர் தான் பதவி விலகுகிறேன் என கடந்த சனிக்கிழமை அறிவித்தார். பிரதமர் பதவியிலிருந்து விலகினாலும் கட்சித் தலைவராக அவர் நீடிப்பார்.



# சோமாலியாவின் தலைநகரில் குண்டுத் தாக்குதல்; 5 பேர் சாவு

சோமாலியா தலைநகர் மொகடிஷுவில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது ஐந்து பேர் கொல்லப்பட்டனர். அத்துடன் 06 பேர் காயமடைந்தனர் என அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

மொகடிஷ் – ஃபாகா சந்திப்பு அருகே உள்ள ஒரு உணவகத்திற்குள் நுழைந்து தற்கொலை குண்டுதாரி குண்டை வெடிக்கச் செய்தார் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.


மொகடிஷ் – ஃபகா சந்தியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலால் அந்தப் பகுதி அதிர்ந்தது. கட்டடங்கள் சிலவும் இந்தத் தாக்குதலில் பலத்த சேதம் அடைந்தன.

இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக எந்தவொரு அமைப்பும் பொறுப்புக் கோரவில்லை. இது குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழக ஊரக உள்ளாட்சித் தேர்தல்களின் முடிவானது தி.மு.கவுக்கு கிடைத்த நற்சான்று என்கிறார் ஸ்டாலின்




'ஐந்தாண்டுகளில் அடைய வேண்டிய நம்பிக்கையை ஐந்து மாதத்தில் பெற்ற பெருமித உணர்வை நான் அடைகிறேன்' என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக ஊரக உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. அதிக இடங்களில் வெற்றிபெற்றுள்ளது. இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஒன்பது மாவட்டங்களில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் கூட்டணிக் கட்சிகளும் மகத்தான மாபெரும் வெற்றியைப் பெற்றுவரும் செய்தி கடந்த ஐந்துமாத திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக்குக் கிடைத்த நற்சான்று ஆகும். சாதனைச் சரித்திரம் தொடர்வதற்கு மட்டுமல்ல, செய்த சாதனைகளுக்கான மக்களின் அங்கீகாரமாகவும் இந்த வெற்றி அமைந்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபோது கொரோனா என்ற கொடிய தொற்று பரவிய காலமாக இருந்தது. ஒருபக்கம் மருத்துவ நெருக்கடி, இன்னொரு பக்கம் பொருளாதார நெருக்கடி. இரண்டும் சூழ்ந்த இக்கட்டான காலகட்டத்தில் திராவிட முன்னேற்ற கழக அரசு அமைந்தது.

கொரோனாவை வென்றோம். பரவலைக் கட்டுப்படுத்தினோம். வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக் கும் நிதி உதவி அளித்தோம். அனைத்துத் தரப்பினரின் தேவைகளையும் அறிந்து நிறைவேற்றிக் கொடுத்தோம்.

ஆட்சிப் பொறுப்பேற்கும்போது இருந்த நிதிநெருக்கடி என்பது சொற்களால் சொல்ல முடியாதது ஆகும். கஜானா காலியான நிலை மட்டுமல்ல, கடனுக்கு மேல் கடன் வாங்கியதன் மூலமாக வட்டிக்கு மேல் வட்டி கட்ட வேண்டிய நிலையில் ஆட்சியை வைத்துவிட்டுப் போயிருக்கிறது கடந்தகால அ.தி.மு.க. அரசு. அதற்காக நிதிநெருக்கடியைக் காரணமாகக் காட்டி தப்பிக்கப் பார்க்கவில்லை நாங்கள்.

மிகக்கடுமையான நிதிநெருக்கடி இருந்தாலும் கொடுத்த வாக்குறுதிகளில் 200 க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டினோம்; நிறைவேற்றியும் வருகிறோம். நாள்தோறும் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைத்து வருகிறோம். இந்த உழைப்புக்கு மக்கள் கொடுத்த அங்கீகாரம்தான் வெற்றி! நிற்க நேரமில்லை என்கிற அளவுக்கு நானும், அமைச்சர்களும், மக்கள் பிரதிநிதிகளும் உழைத்தோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு இருந்த செல்வாக்கை விட, இந்த ஐந்து மாத காலத்தில் செல்வாக்கு அதிகமாகி இருக்கிறது என்பதை நான் சொல்லி வந்தேன். இது ஏதோ எனது அனுமானம் அல்ல, நூற்றுக்கு நூறு உண்மைதான் என்பதை ஊரக உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் நாட்டுக்குக் காட்டியிருக் கின்றன.

சொன்னதை மட்டுமல்ல, சொல்லாத நல்ல பல திட்டங்களையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றி இருக்கிறது என்று மக்கள் நினைக்கிறார்கள். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுகிறது தி.மு.க. அரசு என்ற நம்பிக்கையுடன் வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவோம்.

தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் கொடுத்துள்ள வெற்றி எங்களை உற்சாகம் அடையவைத்துள்ளது. ஊக்கமளிப்பதாக உள்ளது. மேலும் உங்களுக்காக உழைக்கத் தூண்டுகிறது.

ஐந்தாண்டுகளில் அடைய வேண்டிய நம்பிக்கையை ஐந்து மாதத்தில் பெற்ற பெருமித உணர்வை நான் அடைகிறேன். ஐந்தாண்டுகளில் செய்ய வேண்டிய சாதனைகளை, ஐந்து மாதத்தில் செய்ததால் கிடைத்த வெற்றி இது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

வெற்றிக்கொண்டாட்டங்கள் யாருக்கும் இடையூறு ஏற்படுத்தாத வகையில் அமையட்டும் என்று கேட்டுக்கொண்டு, மக்கள் தொண்டு ஒன்றே நமது செயல்பாடுகள் என்று மக்கள் கொண்டாடும் வகையில் நமது பணிகள் அமையட்டும் என்றும் வாழ்த்துகிறேன். மக்கள் நம் மீது வைத்துள்ள நம்பிக்கையைக் காப்போம்! மக்களைக் காப்போம்!" என தெரிவித்துள்ளார்.

## கொரோனாத் தடுப்பூசி மக்களுக்கு இலவசமாகக் கிடைப்பது எரிபொருள் மீதான வரியால் தான் என அமைச்சர் கருத்து



'மத்திய அரசு இலவசமாக கொரோனா' தடுப்பூசிகளை வழங்கிவருகின்றமை, பெற்றோல், டீசல் போன்றவற்றின் மீது பெறப்பட்டுவரும் வரியில் இருந்துதான்' என்று மத்திய இணையமைச்சர் ராமேஸ்வர் தெலி கூறியுள்ளார்

அசாம் மாநிலத்தின் கவுகாத்தியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய மத்திய பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை இணையமைச்சர் ராமேஸ்வர் தெலி, மத்திய மற்றும் மாநில அரசுகள் பெற்றோலுக்கு வரி விதித்துள்ளன. நீங்கள் கொரோனாத் தடுப்பூசிகளை இலவசமாகப் பெறுகிறீர்கள். நீங்கள் தடுப்பூசிகளுக்குப் பணம் செலுத்துவதில்லை. அப்படியானால், கொரோனா தடுப்பூசிகளுக்கான பணம் எங்கிருந்து வருகின்றது? தடுப்பூசிகளுக்கான விலை இந்த வரிகளிலிருந்துதான் வருகிறது.

நமது அரசு 130 கோடி மக்களுக்கு இலவசமாகத் தடுப்பூசி போடுவதை இலக்காகக் கொண்டுள்ளது. ஒரு தடுப்பூசியின் விலை சுமார் 1,200 ரூபாவாகும். ஒவ்வொரு நபருக்கும் 2 தவணைகள் தடுப்பூசி செலுத்த வேண்டும். எனவே இதற்கு ஆகும் செலவினங்களை ஈடுகட்ட பெற்றோல், டீசல் விலை உயர்வைத் தவிர்க்க முடியாது.

ஒரு லீற்றர் பெற்றோலின் அடிப்படை விலை ரூபா.40. மத்திய மற்றும் மாநில அரசுகள் விதிக்கும் வரிதான் மீதித் தொகையாக இணைக்கப்படுகின்றது. நாட்டிலேயே குறைவான வரியை விதிப்பது அசாம் மாநிலம்தான். ராஜஸ்தானில் ஆளும் காங்கிரஸ் அரசு, நாட்டிலேயே அதிக அளவுக்கு பெற்றோல் மீது வரி விதிக்கிறது. மகாராஷ்டிரா மாநில அரசும் அதிக வரியை விதிக்கிறது. ஆனால், விலையதிகரிப்புக் குறித்த குற்றச்சாட்டுகள் மத்திய அரசின் மேல்தான் விழுகின்றன. ஒரு லீற்றர் பெற்றோலை விட ஒரு லீற்றர் இமயமலைத் தண்ணீர் விலை அதிகம்" என்று தெரிவித்திருக்கிறார்.




## இந்திய உள்நாட்டு விமான சேவைகளில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கம்

உள்நாட்டு விமான சேவைகள் எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி வழக்கமான நடைமுறையைப் பின்பற்றலாம் என்று இந்திய மத்திய விமானப்போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவில் உள்நாட்டு விமான சேவைகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டு விமானப்போக்குவரத்தில் 54 சதவீத இருக்கை வசதியை மட்டுமே பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நாட்டில் வைரஸ் பரவல் பெருமளவு குறைந்துள்ளதையடுத்து உள்நாட்டு விமான சேவைகளில் விதிக்கப்பட்டிருந்த அனைத்து கட்டுப்பாடுகளையும் இந்திய மத்திய விமானப்போக்குவரத்து அமைச்சகம் நீக்கியுள்ளது. அதன்படி வரும் 18 ஆம் திகதி முதல் உள்நாட்டு விமான சேவை எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி முழுமையாக 100 சதவீத இருக்கை வசதியுடன் பயணங்களை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




## திரையரங்குகளை இயக்குவதற்கு மகாராஷ்டிர அரசு அனுமதி

ஒக்ரோபர் 22 ஆம் திகதி முதல் திரையரங்குகளை 50 சதவீத பார்வையாளர்களுடன் மீண்டும் இயங்க அனுமதிப்பதற்கு மகாராஷ்டி அரசு முடிவெடுத்துள்ளது.

இந்தியாவில் கொரோனாவானது அனைத்துத் துறைகளையும் முடக்கிப்போட்ட நிலையில் சினிமா மற்றும் திரையரங்குகளும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. தற்போது கொரோனாப் பாதிப்பு ஓரளவுக்குக் கட்டுக்குள் வந்துள்ளது.

இந்த நிலையில், திரையரங்குகளை மீண்டும் திறப்பது குறித்து திரைப்படத் தயாரிப்பாளர் ரோஹித் ஷெட்டி மற்றும் திரைப்படத்துறையைச் சேர்ந்தவர்கள் கடந்த மாதம் மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரேவைச் சந்தித்து கோரிக்கையை முன்வைத்தனர். இதனையடுத்து சுகாதார வழிகாட்டல்களுடன் ஒக்ரோபர் 22 முதல் சினிமாத் திரையரங்குகளை மீண்டும் இயங்க அனுமதிக்கவுள்ளதாக மகாராஷ்டிரா அரசு அறிவித்துள்ளது. அதற்கான நடைமுறைகளையும் மாநில அரசு வெளியிட்டது.

அதன்படி திரையரங்குகள் 50 சதவீத பார்வையாளர்களுடன் இயங்குவதற்கு அனுமதிக்கப்படும். பார்வையாளர்கள் முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் போன்ற அரசின் வழிகாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.



## கோயில் நகைகளை உருக்கி தங்கக் கட்டிகளாக மாற்றும் திட்டத்தை ஆரம்பித்தார் தமிழக முதல்வர்

தமிழகத்தில் திருச்சி சமயபுரம் மாரியம்மன், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோவில் உள்ளிட்ட 3 கோவில்களில் உள்ள பொன் இனங்களை உருக்கி தங்கக் கட்டிகளாக மாற்றும் பணியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆரம்பித்துவைத்தார். நகைகளை உருக்கி 24 கரட் தங்கக் கட்டிகளாக மாற்றி, வங்கியில் முதலீடு செய்வதற்கான பணிகளும் இதன்போது தொடக்கி வைக்கப்பட்டுள்ளன.

# சுகாதார சுற்றுநிருப வழிமுறைகளைப் பேணாமல் செயற்படுகின்றது மட்டக்களப்பு கல்வி வலயம்

### என்கிறார் இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர்

மட்டக்களப்பு கல்வி வலயமானது கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கு முரணாக எவ்வித சுகாதார வழிமுறைகளையும் பேணாமல் மாணவர்களை பரீட்சை எழுதும்படி அழைத்துள்ளார்கள் என இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் பொ.உதயரூபன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

13ஆம் திகதி சாதாரணதர, உயர்தர மாணவர்களுக்கு பரீட்சை நடத்துவது தொடர்பாக சுற்று நிருபம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு பெற்றோர்களுக்குத் தொலைபேசி மூலம் பலவந்தப்படுத்தி இந்தப் பரீட்சையில் கட்டாயம் ஈடுபட வேண்டும் என மட்டக்களப்பு கல்வி வலயத்தினால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 55 ஆரம்பப் பாடசாலைகளும் எதிர்வரும் 21ஆம் திகதி திறப்பது சம்பந்தமாக கல்வி அமைச்சினால் சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது. அந்த சுற்று நிருபத்தின் படி சுகாதார நடைமுறைகளைப் பேணி இந்தப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதோடு சுகாதார அதிகாரிகளும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால் மட்டக்களப்பு கல்வி வலயமானது கல்வி அமைச்சினால் வெளியிட்டுள்ள சுற்று நிருபத்திற்கு முரணாக எவ்வித சுகாதார வழிமுறைகளையும் பேணாமல் மாணவர்களை பரீட்சை எழுதும்படி அழைத்துள்ளார்கள்.

பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட்ட பின்னர்தான் பாடசாலை ஆரம்பிக்கப்பட வேண்டும் என எமது ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியிருக்கின்றது. ஆனால் இந்த வலியுறுத்தலையும் மீறி மாணவர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சுகாதாரப் பணிப்பாளரின் அறிக்கையின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டமே மிகக் குறைந்த தடுப்பூசிகளைப் பெற்ற மாவட்டமாக இனங்காணப்பட்டுள்ளது. 28 வீதமானவர்களே தடுப்பூசிகளைப் பெற்றிருக்கின்றார்கள்.

மிகக் குறைந்த அளவினர் தடுப்பூசியைப் பெற்ற இந்த மாவட்டத்தில் இவ்வாறு மாணவர்களைப் பரீட்சைக்குத் தோற்றும்படி கேட்டிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்க விடயமாகும்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான பரீட்சைகள் முன்னெடுக்கப்பட்டு பெரும்பாலான பணம் செலவழிக்கப்பட்டது. அவ்வாறு பணம் செலவழிக்கப்பட்டும் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்திகரமாக அமையவில்லை. கடந்த காலத்தில் உயர்தரத்தில் மட்டக்களப்பு கல்வி வலயத் திற்குட்பட்ட 94 மாணவர்கள் விஞ்ஞான பாடத்தில் ஒரு சித்தியும் பெறாதவர்களாக இருக்கின்றார்கள். அதேபோல் சாதாரண தரத்தில் 55 மாணவர்கள் ஒரு பாடமும் சித்தியடையாதவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறான நிலைமையில் தற்போது மாணவர்கள் உளரீதியான தாக்கங்களுடன் எந்தப் பாடத்திட்டத்தினைப் பூர்த்தி செய்திருக்கின்றார்கள், எந்த வகையில் அவர்களுக்குப் பரீட்சைகளை வைக்க வேண்டும் என்ற ஏற்பாடுகள் இல்லாமல் அவர்கள் பரீட்சைக்குத் தோற்றும்படி வற்புறுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

இது தொடர்பில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி செயலாளருடனும் தொடர்பினை ஏற்படுத்தி கிழக்கு மாகாணத்தில் இந்தக் கல்வி வலயத்தில் மட்டும் சுகாதார சுற்று நிருபத்தை மீறி ஏன் இவ்வாறான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என வினவியிருந்தேன். ஆனால் இதற்கு அவர்களிடமிருந்து எவ்விதப் பதிலும் இல்லை.

பாடத்திட்டங்கள் எந்த அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்ற விடயம் தெரியாதிருக்கும் போது இந்த கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் பரீட்சையை மையப்படுத்தி மாணவர்களைப் பலவந்தப்படுத்தி பரீட்சைகளில் அவர்களை ஈடுபடச் செய்வதை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது என தெரிவித்துள்ளார்.

## போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3- I (இ) தரத்துக்கு மாவட்ட ரீதியாக உயர்தேசிய டிப்ளோமாதாரிகளை ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை கடந்த 14.08.2021 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்து பிற்போடப்பட்டது.

குறித்த உளச்சார்பு பரீட்சையானது எதிர்வரும் 30.10.2021ஆம் திகதி மீண்டும் நடத்தப்படவுள்ளதோடு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு தற்போது தபாலிடப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்தி எவருக்காவது 27.10.2021 ஆம் திகதிக்கு முன் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறவில்லையெனின் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் 026-2220092 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



## நோர்வே, நெதர்லாந்து உயர்ஸ்தானிகர்களை சந்தித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

### பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடல்

இலங்கைக்கான நோர்வே உயர்ஸ்தானிகர் ட்ரைன் ஜரான்லி எஸ்கெடல் மற்றும் நெதர்லாந்து உயர்ஸ்தானிகர் தஞ்சா கோங்கிரிஜ்ட் ஆகியோரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சந்தித்து பேசியுள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தை எதிர்காலத்தில் முன்னேற்றும் செயல்பாடுகளில் முதன்மையான தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் இயற்கை அழகுடன் காணப்படும் மட்டக்களப்பு மாவட்ட சுற்றுலாதுறையை மேம்படுத்தும் பல திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் காணி அபகரித்தல் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் மண் அகழ்வு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டதுடன், இதற்கான ஆதாரங்களுடன் கூடிய ஆவணமும் கையளிக்கப்பட்டது. இதன்போது சாணக்கியன் விசேட கோரிக்கை ஒன்றினையும் முன்மொழிந்திருந்தார்.

குறிப்பாக தொல்பொருள் எனும் பெயரில் காணிகள் சூறையாடப்படுவதை தடுக்கும் நோக்குடன் தொல்பொருள் சம்பந்தமான செயற்பாடுகள் அனைத்தும் யுனெஸ்கோ (UNESCO) அமைப்பின் ஊடாக சர்வதேச கண்காணிப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இதன்மூலம் நாம் எதிர்கொள்ளும் சட்டவிரோத காணி அபகரிப்பு போன்ற பிரச்சினைகளை தடுக்க முடியும் என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். அத்துடன், இன்றைய குறித்த சந்திப்பானது சமகால அரசியல் பரிமாற்றத்துடன் முற்றுப்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.



## 20 ரூபாவுக்கு ஐஸ்கிறீம் வாங்கி 84 ஆயிரம் ரூபா நூதன திருட்டு

வர்த்தக நிலையம் ஒன்றுக்குச் சென்ற இளைஞன் அங்கு இருபது ரூபாவுக்கு ஐஸ்கிறீம் ஒன்றை வாங்கி விட்டு அங்கிருந்த 84,000 ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தைத் திருடிச் சென்றுள்ள சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஐஸ்கிறீம் வாங்கிய குறித்த இளைஞன் கடைக்கு அருகில் நின்றுள்ளார். இதனை அவதானிக்காத கடையில் இருந்த பெண்மணி கடைக்கு பின்னாலுள்ள அறைக்குள் சென்றுள்ளார். பெண் செல்வதை அவதானித்த அந்த இளைஞன் கடைக்குள் புகுந்து அங்கிருந்த 84,000 ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தை திருடிச் செல்லும் காட்சி அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கடை உரிமையாளர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொக்கட்டிச்சோலையில் பெண் தற்கொலை

கொக்கட்டிச்சோலை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கொக்கட்டிச்சோலை 9 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த (26) வயதுடைய கணபதிப்பிள்ளை அனிதா என்பவர் தனது வீட்டின் அறையில் வைத்து தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த யுவதி கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்து கணவரை பிரிந்து தனது பெற்றோருடன் வாழ்ந்து வந்த நிலையில் சம்பவ தினத்தன்று வீட்டில் யாரும் இல்லாத நிலையில் வீட்டின் அறையினுள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என ஆரம்ப விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வானின் உத்தரவிற்கமைவான சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டமையுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு






# இறுதிப்போட்டியில் சென்னையை எதிர்கொள்ளும் அணி எது?

## தீர்மானிக்கும் போட்டியில் கொல்கத்தா – டெல்லி மோதல்!

சார்ஜாவில் இன்று நடைபெறுகின்ற ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டிக்கான இரண்டாவது தெரிவுப்போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியும் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன. இந்தப்போட்டியில் வெற்றிபெறும் அணி வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இந்த வருடத் தொடரில் ஏற்கனவே இரு அணிகளும் மோதிய இரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பதிவுசெய்துள்ளன. ஐ.பி.எல். வரலாற்றில் இரு அணிகளும் இதுவரை 28 முறை மோதியுள்ளன. இதில் டெல்லி அணி 12 போட்டிகளிலும் 15 போட்டிகளில் கொல்கத்தா அணியும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டியில் முடிவு பெறப்பட்டிருக்கவில்லை.

# விளையாட்டுத்துறை ஆலோசகராக நிரந்தர நியமனம் பெற்றார் சுசந்திகா

இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராக ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற இலங்கையின் முன்னாள் குறுந்தூர ஓட்ட வீரங்கனையான சுசந்திகா ஜயசிங்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.



இந்த நியமனத்திற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது என அமைச்சரவையின் இணைப்பேச்சாளரான ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

சுசந்திகா ஜயசிங்க இதற்குமுன் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசகராக செயல்பட்டு வந்த போதி லும், அவருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாது ஒவ்வோர் ஆண்டும் மீளப் புதிப்பிக்கப்பட வேண்டிய ஒப்பந்த அடிப்படையிலேயே அப்பதவி வழங்கப்பட்டிருந்தது. தற்போது விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் முயற்சியால் வழங்கப்பட்டுள்ள நியமனத்தின்படி, அவர் ஓய்வு பெறும்வரை குறித்த பதவி யில் நீடிக்கமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துர்கிஷ் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயம் வோல்ட்டெரி போட்டஸ் வெற்றி




போர்முலா-1 கார்பந்தயத் தொடரின் துர்கிஷ் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில், மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான வோல்ட்டெரி போட்டஸ் முதலிடம் பெற்றுள்ளார்.

23 சுற்றுகளாக நடத்தப்படும் வருடாந்த போர்முலா -1 கார் பந்தயத்தின் இந்த ஆண்டுக்கான 16ஆவது சுற்று இஸ்தான்புல் பார்க் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது. இதில் 309.396 கிலோ மீற்றர் நீளமான பந்தயத் தூரத்தை மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான வோல்ட்டெரி போட்டஸ் 1 மணித்தியாலம் 31 நிமிடங்கள் 04.103 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். அவருக்கு 26 புள்ளிகள் வழங்கப்பட்டன.

அவரை விட 14.584 வினாடிகள் பின் தங்கிய ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் இரண்டாவது இடத்தையும் 18 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார்.

33.471 வினாடிகள் பின்தங்கிய ரெட் புல் அணியின் மற்றொரு வீரரான செர்ஜியோ பெரெஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்து, 15 புள்ளிகளையும் எடுத்தார்.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள பதினாறு சுற்றுகளின் முடிவில் ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் ஏழு வெற்றிகள், 262.5 புள்ளிகளுடன் முதலாவது இடத்தில் உள்ளார். மெர்சிடஸ் பென்ஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் ஐந்து வெற்றிகள், 256.5 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், மெர்சிடஸ் பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வோல்ட்டெரி போட்டஸ் ஒரு வெற்றி, 177 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

பதினேழாவது சுற்றான அமெரிக்க கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 25ஆம் திகதி, அமெரிக்காஸ் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

# பயிற்சிப் போட்டியில் இலங்கை வெற்றி!

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான பயிற்சிப்போட்டியில் இலங்கை அணி பங்களாதேஷ் அணியை 4 விக்கெட்டுக்களால் வென்றுள்ளது.

நேற்று அபுதாபியில் நடைபெற்றிருந்த இந்தப் பயிற்சிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சௌம்யா சர்க்கார் 34 ஓட்டங்களைப்பெற்றார். இலங்கை அணியின் துஷ்மந்த சமீர 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.




அடுத்துத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி 19 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கையடைந்தது. இலங்கை அணியின் அவிஷ்க பெர்னாண்டோ ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களையும், சம்மிக்க கருணாரட்ன 29 ஓட்டங்களையும் எடுத்தனர். பங்களாதேஷ் அணியின் சௌம்யா சர்க்கார் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இலங்கை அணி தனது அடுத்த பயிற்சிப் போட்டியில் பப்புவா நியூகினியா அணியை எதிர்கொள்ளவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆசிரியர் போராட்ட பிரச்சினைக்கு தீர்வு காண எனக்குத் தெரியும்!

## எஸ்.பி. திஸாநாயக்க சூளுரை



அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டு போராட்டங்களை ஒடுக்கி பாடசாலைகளைத் திறக்க வேண்டும் என முன்னாள் உயர் கல்வி அமைச்சரும், தற் போதைய ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டம் ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

ஆசிரியர் போராட்டப் பிரச்சினைக்குத் தீர்வு காண எனக்குத் தெரியும். ஜனாதிபதியும், பிரதமரும் அமைதியான வழியிலான தீர்வையே எதிர்பார்க்கின்றார்கள். பிரதமருடனான பேச்சில் இணக்கப்பாடு எட்டப்படும் என நம்புகின்றேன். அவ்வாறு இல்லை என்றால் போராட்டத்தை ஒடுக்கி நாம் பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நாம் அவ்வாறு செய்திருக்கின்றோம். முன்னாள் பிரதமர் சிறிமோவோ பண்டாரநாயக்க, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன போன்றவர்கள் இதனைச் செய்துள்ளனர்.

உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் போராட்டங்கள் ஒடுக்கப்பட்டுள்ளன. மஹதிர் மொஹமட், லீ குவன் போன்ற தலைவர்கள் போராட்டங்களை ஒடுக்கியுள்ளனர். செல்வந்த நாடுகள் போராட்டங்களை ஒடுக்கியிருக்காவிட்டால் இன்றும் அந்த நாடுகள் எம்மைப் போன்று வறிய நாடாகவே இருந்திருக்கும்.

போராட்டங்களை அடக்கி ஒடுக்கி வேலையை செய்த காரணத்தால் மேற்படி நாடுகள் இன்று செல்வந்த நாடுகளாக மாறியுள்ளன. - என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் ஆசிரியர் அதிபர் சங்கங்கள் நடத்திய பேச்சின் போது சம்பள முரண்பாட்டு பிரச்சினைக்கு இரண்டு கட்டங்களாகத் தீர்வு வழங்கப்படும் என பிரதமர் பரிந்துரை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிருப்தியடைந்த இலங்கை அகதி குடும்பத்தினர் தீக்குளிக்க முயற்சி!

நீதிமன்றம் உத்தரவுப் பெற்றும் அதிகாரிகள் அலைக்கழித்ததால் அதிருப்தி அடைந்த இலங்கை அகதி குடும்பத்தினருடன் டீசல் ஊற்றி தீக்குளிக்க முயன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக தமிழக ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அடுத்துள்ள கீழ்ப்புத்துபட்டு அகதிகள் முகாமைச் சேர்ந்தவர் மனோரஞ்சிதம் (வயது 50). இவரது பெயரிலும், இவரது சகோதரர் பெயரிலும் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அடுத்துள்ள மணக்காட்டூர் பகுதியில் நிலம் உள்ளது.

இந்த நிலத்தை அருகில் உள்ள வீரச்சாமி மற்றும் தங்கம் (எ) பொன்னையா ஆகியோர் அனுபவித்து வந்தனர் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில் தங்களுக்கு உரிய நிலத்தை அளவீடு செய்து கொடுக்க நீதிமன்றம் மூலம் மனோரஞ்சிதம் உத்தரவு பெற்றுள்ளார்.

அந்த உத்தரவை நத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தும் நில அளவீடு செய்வதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

பல முறை முறையிட்டும் பயனில்லாததால் அதிருப்தி அடைந்த மனோரஞ்சிதம், தனது மகள் மணிமாலா, மருமகன் ஆதி மற்றும் பேரன் என குடும்பத்தோடு வட்டாட்சியர் அலுவலகத்திலேயே டீசலை ஊற்றி தீக்குளிக்க முயன்றார்.

இதையடுத்து அங்கு பாதுகாப்புக்கு நின்ற பொலிஸார், டீசல் கானை பறித்து, மனோரஞ்சிதம் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது தண்ணீரை ஊற்றி தீக்குளிப்பு முயற்சியை தடுத்து நிறுத்தினர்.

பின்னர் சிகிச்சைக்காக நத்தம் அரச வைத்தியசாலைக்கு அனைவரும் அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் விபத்து பெண் ஒருவர் காயம்

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் புதிய சாளம்பைக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது அதே திசையில் பின்புறமாக பயணித்த பிளசர் ரக மோட்டார் சைக்கிள் உழவு இயந்திரத்தை முந்தி செல்ல முற்பட்ட போது உழவு இயந்திரத்தின் பின் பகுதியிலுள்ள கலப்பையில் மோதுண்டு விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வெளிக்குளத்தைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இருவேறு இடங்களில் வெடிபொருள்கள் மீட்பு

## முல்லையில் சம்பவம்



முல்லைத்தீவு - அளம்பில் பகுதியில் தனியார் ஒருவரின் காணி ஒன்றிலிருந்து நேற்று (செவ்வாய்க்கிழமை) வெடி பொருள்கள் கண்டுப்பிடிக்கப் பட்டுள்ளன.

நிலத்தை விவசாய நடவடிக்கைக்காக பண்படுத்தும் போது நிலத்தில் சில வெடி பொருள்கள் இருக்கின்றமை உரிமையாளர்களால் இனங் காணப்பட்டு முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது, துப்பாக்கி ரவைகள், கனரகத் துப்பாக்கி ரவைகள், எறிகணைகள் என்பன மீட்கப்பட்டுள்ளமையுடன், வெடிபொருள்கள் தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்பிக்கவுள்ளதாகவும் முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கோப்பாப்பிலவு பகுதியில் தனியார் காணி ஒன்றில் இருந்து மிதிவெடி ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனையும் பொலிஸார் மீட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கைக்கான கனடா தூதர் யாழ். போதனாவுக்குச் சென்றார்









இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்கினோன் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

இதன்போது யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த அவர், தற்போதைய வைத்திய சேவைகள் மற்றும் கொவிட் தொற்று நிலைமைகள் பற்றி வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தியிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையின் அருங்காட்சியகக் கட்டடத் தொகுதியையும் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.